**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**முன்னிலை : திரு.K.R.கண்ணன், பி.ஏ., பி.எல்.,**
**(J.O.CODE : TN01220),**
**கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர்.**

**2025−ம் ஆண்டு ஜுலை மாதம் 09 ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், ஆனித் திங்கள் 25 ம் நாள்**

**இடைநிலை மனு எண். 4/2024**

**in**

**அசல் வழக்கு எண். 602/2022**

சுமதி .....மனுதாரர்/வாதி

//எதிர்//

1. வசந்தகுமார்

2. பாப்பாத்தி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

3. V.தங்கபாண்டியன்

த/பெ.வெள்ளதுரை .....அவசிய தரப்பினர்/3 ம் பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பு கடந்த 19.06.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கார்த்திகேயன்,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஷிஹான்,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகி நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கியும் எதிருரை தாக்கல் செய்ய தவறியுள்ளார். அவசிய தரப்பினர்/3 ம் பிரதிவாதி தரப்பில் இந்த மனுவில் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிறகு, 3 ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதால், தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார். மனு, வழக்கு கோப்புகள் மற்றும் மனுதாரர் தரப்பு வாதம் ஆகியவற்றை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும்.

**//உத்தரவு//**

இந்த மனு மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை I விதி 10–ன் கீழ் தாவாவில் 3ம் எதிர்மனுதாரர்/முன்மொழியப்படும் பிரதிவாதியை 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் : –**

2.1) இந்த மனுவின் மனுதாரர் தாவாவில் வாதி ஆவார். 1, 2 எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள். 3ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கின் அனைத்து சங்கதிகளும் நேரடியாக வாதிக்கு நன்கு தெரியும். வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்காக வழக்கு சொத்தில் பாகம் கேட்டு பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.2) இந்நிலையில் கடந்த 06.06.2023–ம் தேதி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி, 3–ம் பிரதிவாதியிடம் வழக்கு சொத்தை ரூ.1,30,00,000/ (ரூபாய் ஒரு கோடியே முப்பது லட்சம்)–க்கு விலை பேசி கிரைய ஒப்பந்தம் முடித்து முன்தொகையாக ரூ.21,00,000/– (ரூபாய் இருபத்தொரு இலட்சம்) வாங்கியுள்ளார் என்ற விபரம் வாதிக்கு கடந்த அக்டோபர் மாதம் தெரிய வந்தது. மேலும் 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி, 3ம் பிரதிவாதியிடம் வழக்கு சொத்தை 1,30,00,000/– (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சம்)–க்கு விலை பேசி கிரைய ஒப்பந்தம் முடித்து முன்தொகையாக ரூ.21,00,000/– (ரூபாய் இருபத்தொரு லட்சம்) பெற்று கொண்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் காலதாமதபடுத்தி வந்ததால் 3ம் பிரதிவாதி, 1–ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக ஏற்றுதை ஆற்றுக பரிகாரம் கேட்டு திருப்பூர், இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கு எண்.29/2024 (O.S.No.29/2024) விசாரணையில் உள்ளது என்பதும் வாதிக்கு தெரியவருகிறது.

2.3) கடந்த 06.06.2023–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும், Necessary party/ 3–ம் பிரதிவாதியுமான தங்கபாண்டியன் இருவரும் வழக்கு சொத்து குறித்து கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டதற்கான பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தப் பத்திரம்

மற்றும் அவசிய தரப்பினர்/3ம் பிரதிவாதியுமான தங்கபாண்டியன் அவர்கள் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக திருப்பூர். இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கின் (O.S.No.29/2024) E-Court Status ஓர் ஆவணமாக இத்துடன் தாக்கல் செய்துள்ளார்.

2.4) ஆகவே 3-ம் பிரதிவாதியை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்ப்பது மிகவும் அவசியமானதாக உள்ளது. 3ம் பிரதிவாதியை இவ்வழக்கில் ஓர் தரப்பினராக சேர்க்காமல் போனால் வாதிக்கு உரிய நீதி கிடைக்காமல் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுவார். ஆகையால், இம்மனுவில் கோரியுள்ள 3ம் பிரதிவாதியை இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து, செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

3) 1ம் எதிர்மனுதாரர்கள்/1ம் பிரதிவாதி தரப்பிற்கு நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கியும் எதிருரை தாக்கல் செய்ய தவறியுள்ளார். அவசிய தரப்பினர்/3ம் பிரதிவாதி தரப்பில் இந்த மனுவில் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிறகு, 3ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதால், தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4) மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் முன்னிலைப்படுத்தவில்லை, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

**<u>5. தீர்வு :-</u>**

5.1) இந்த மனுவின் மனுதாரர் தாவாவில் வாதி. இந்த மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவாவில் 1, 2 பிரதிவாதிகள். 3ம் எதிர்மனுதாரர் இந்த மனுவின் முன்மொழியப்பட்ட பிரதிவாதி. மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்கள் இந்த உத்தரவில் தாவாவில் வாதுரைத்துள்ளவாறு விவாதிக்கப்பட்டுள்ளார்கள்.

5.2) தாவாவில் வாதி, தாவாச் சொத்துக்களை மூன்று சமபாகங்களாக பிரித்து அவருக்குரிய 1/3 பாகத்தை ஒதுக்கக் கோரியும், 15.10.2020ம் தேதி 1ம் பிரதிவாதி

பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் வாதியின் பாகத்தைப் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக் கோரியும், திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.115/2020 ன் தீர்ப்பாணை நிலைக்கத்தக்கதல்ல. இரத்து செய்ய வேண்டும் போன்ற பரிகாரங்கள் கேட்டு தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.3) 1ம் பிரதிவாதி வாதியின் சகோதரர், 2ம் பிரதிவாதி வாதியின் தாயார். வாதி தாவாச் சொத்துக்கள் அவருடைய பாட்டனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற அடிப்படையில் அவருக்குரிய சொத்தைப் பிரித்து தரக் கோரி பாகப்பிரிவினை பரிகாரத்தை கோரியுள்ளார். தற்சமயம் வாதி இம்மனுவை தாக்கல் செய்து முதல் பிரதிவாதி தாவாச் சொத்தை விற்பனை செய்வதற்காக முன்மொழியப்பட்ட பிரதிவாதியுடன் 06.06.2023 ம் தேதி பதிவு ஏற்படாத கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தி சொத்துக்கள் கிரயம் செய்து தர தவறியதால், தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தில் ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரத்திற்காக வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து முன்மொழியப்பட்ட பிரதிவாதியை இந்த தாவாவில் அவசிய தரப்பினராக சேர்க்க கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி மற்றும் 3ம் எதிர்மனுதாரர் இடையே ஏற்பட்ட 06.06.2023 ம் தேதிய கிரய ஒப்பந்த ஆவணத்தின் நகல் தாக்கல் செய்துள்ளார்.

5.4) தாவா 1ம் பிரதிவாதி, தாவாச் சொத்து அவருக்கு 15.09.2020 ம் தேதி ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் படி பாத்தியப்பட்டதாக தெரிவித்து முன்மொழியப்பட்ட பிரதிவாதியுடன் பதிவு ஏற்படாத கிரைய ஒப்பந்த பத்திரத்தை 06.06.2023 ம் தேதி ஏற்படுத்தியுள்ளார். அதனடிப்படையில், திருப்பூர் இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரத்திற்காக 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்று வாதி மனுவில் தெரிவித்துள்ளார். இந்த வழக்கைப் பொறுத்து வரை வாதிக்கு தாவாச் சொத்தில் பாக உரிமை உள்ளதாக நீதிமன்றம் முழு விசாரணைக்கு பிறகு, முடிவுக்கு வந்தும், 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம், வாதிக்கு தாவாச் சொத்திற்குரிய பாகத்தைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்று தீர்வு ஏற்பட்டால்,

1ம் பிரதிவாதி முன்மொழியப்பட்ட 3ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரம் வாதிக்கு தாவாச் சொத்தில் உள்ள உரிமையைப் பொறுத்து கட்டுப்படுத்தாது. இந்த வழக்கைப் பொறுத்து வாதி தாவாச் சொத்து அவருடைய மூதாதையர் சொத்து என்ற அடிப்படையில், உரிமை உள்ளது என்பதை நிரூபணம் செய்தால் தான் அவருக்குரிய பாகத்தை பிரித்து முதல் நிலை தீர்ப்பாணை ஏற்படுத்த முடியும். ஆகையால், இத்தகைய சூழ்நிலையில், முன்மொழியப்பட்ட பிரதிவாதி இந்த வழக்கைப் பொறுத்தவரை அவசியமற்ற தரப்பனர் என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

5.5) மேலும், 1ம் பிரதிவாதி, முன்மொழியப்பட்ட பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட பதிவு ஏற்படாத 06.06.2023ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், தாவாச் சொத்தின் உரிமை முன்மொழியப்பட்ட பிரதிவாதிக்கு ஏற்படாது என்பதாலும், அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தால், இந்த மனு தேவையற்றது என்று முடிவு செய்து, முன்மொழியப்பட்ட பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினார் என்பதால், இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. சூழ்நிலை கருதி செலவுத் தொகை இல்லை என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு **2025ம் ஆண்டு ஜுலை மாதம் 09ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.07.09 16:54:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**<u>1. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்</u> :–** இல்லை

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.07.09 16:54:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.